# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,153 — 1960 ජූලි 1 වැනි සිකුරාදා — 1.7.1960

12,153 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 559 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | 559 |
| மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

L. D. B. 207/41

### 1941 ம் ஆண்டின் 27ம் இலக்கச் சம்பளச்சபைச் சட்டம் 6 (2) ம் பிரிவின்கீழ் அறிவித்தல்

உறைநீர், வளிநீர் உற்பத்தித்தொழில் சம்பந்தமானதும், இதன்கீழ் குறிக்கப்பட்டுள்ளதுமான கட்டளை 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்க சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச் சபைச் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின்கீழ் என்னுல் செய்யப் பட்டுள்ளதென்று, குறித்த சட்டத்தின் 6 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது. இக்கட்டளை 1960 ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 1 ந் தேதியன்று நடைமுறைக்குவரும்.

பீ. எச். அலுவிஹாரே,
தொழில், கைத்தொழில் மீன்பிடித்
தொழில் மந்திரி.

கொழும்பு,
1960 ம் ௵ ஜூன் ௴ 22 ந ௳.

**கட்டளை**

1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைச் சட்டத்தின் II ம் பாகத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்குப் பொருந்தும் :—

உறைநீர் (Ice), வளிநீர் (Aerated water) உற்பத்தித்தொழில், அதாவது—

தாது வர்க்கநீர் (Mineral waters) அல்லது வளிநீர், மதுச்சத்துச் சேராத பழரசம், சுவையூட்டிய பாணிவகை, புளியாத இனிய பானவகை, மருந்து கலந்த பானவகை, உறைநீர் (Ice) ஆகியன.

பின்வருவனவும் இதற்குட்படும் :—

(1) போத்தல் கழுவுதல் சம்பந்தமான வேலைகள் ;

(2) பாணிவகை தயாரித்தல் ;

(3) போத்தலில் இடுதலும், நிரப்புதலும், அடைத்தலும், நாம விலாசம் ஒட்டுதலும் ;

(4) உற்பத்திக்கு முன்னும் பின்னும் போத்தல்களைக் கையாளுதல் ;

(5) மேற்கூறிய பானவகையுள் எவற்றையும் போத்தல்களில் அல்லது மற்றும் பாத்திரங்களில் விற்பதற்காகச் செய்யப்படும் மற்றும் வேலைகள் யாவும் ;

(6) உறைநீர் உற்பத்தி சம்பந்தமான வேலைகள் யாவும் ;

(7) மேற்கூறிய பானவகையும், உறைநீரும் உற்பத்திசெய்யுந் தலத்தில் அவற்றின் விற்பனை சம்பந்தமான வேலை ;

(8) மேற்கூறிய பானவகையும், உறைநீரும் ஏற்றிச்செல்லுதல், விநியோகித்தல், (உற்பத்தி செய்யும் தலமல்லாத மற்றுந் தலங்களில்) விற்றல், அத்தகைய பானவகையும் உறைநீரும் உற்பத்தி செய்யும் முயற்சியில் வேலைபார்ப்போர் (வேலை செய்யுந் தலத்தில்) வெற்றுப் போத்தல்களைச் சேகரித்தல் ஆகியன சம்பந்தமான வேலை.

ஆனுல், பின்வரும் வேலையாளரின் வேலை இதற்குட்பட்டதன்று—

(1) லிகிதர், காசாளர், பண்டகசாலைப் பொறுப்பாளர், நேரக்குறிப்பாளர், ஓவசியர்மார், காவலாளிகள், பராமரிப்போர் ;

(2) 1945 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 2 ந் தேதி வெளிவந்த 9,481 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரமாகிய கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலுள்ள வேலையாளர் ;

(3) 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் திகதி வெளிவந்த 9,224 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரமாகியதும், பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட இயந்திரத் தொழிலிலுள்ள வேலையாளர்.

---

**சம்பளச்சபைச் சட்டம்**

தீப்பெட்டி உற்பத்தித்தொழிற் சம்பளச்சபைச் சட்டத்தின் முதலாளிகளின் பிரதிநிதியாகவிருந்த திரு. பி. உ. தோர்ஸ்றென்சன் தமது அங்கத்தவர் பதவியிலிருந்து தாமாக விலகியதால், அவருக்குப் பதிலாக அங்கத்துவம் வகிக்க திரு. வை. எச். எக்மாக் என்பவரை, 1943 ம் ஆண்டின் 40 ம் இல. சம்பளச்சபைச் (திருத்த) சட்டத்தாலும், 1953 ம் ஆண்டின் 5 ம் இல. சம்பளச்சபைச் (திருத்த) சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட 1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச்சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம் கனம் தொழில், கைத்தொழில், மீன்பிடித் தொழில் மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபைச் சட்ட விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சா. ப. குமாரசிங்க,
தொழில், கைத்தொழில், மீன்பிடித்
தொழில் மந்திரி காரியாலய நிரந்தரக்
காரியதரிசி.

கொழும்பு,
1960 ம் ௵ ஜூன் ௴ 23 ந ௳.

---

**சம்பளச் சபைச் சட்டம்**

மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிற் சம்பளச் சபையில், நியமன அங்கத்தவராக இருந்த திரு. பி. காசிலிங்கம் தாமாக விலகியதால், அவருக்குப் பதிலாக திரு. எஸ். எஸ். எச். சில்வா என்பவரை, 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்கச் சம்பளச் (திருத்த) சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், கைத்தொழில், கடற்றொழில் மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சா. ப. குமாரசிங்க,
தொழில், கைத்தொழில், கடற்றொழில்
மந்திரி காரியாலய மேலதிக நிரந்தரக்
காரியதரிசி.

கொழும்பு,
1960ம் ௵ ஜூன் ௴ 23 ந ௳.

---

## அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

### அறிவித்தல்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் நிமித்தம் மாத்தறை டிஸ்திறிக் எல்லைக்குள் இருக்கும் அகுறஸ்ஸ, தெனியாய ஆகிய தாஞயங்கள், 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 19 ம் 20 ந் திகதிகளில் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்படமாட்டாது.

வ. ஐ. மொஹிதீன்,
மாத்தறை டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு

மாத்தறைக் கச்சேரி,
1960 ம் ௵ ஜூன் ௴ 25 ந ௳.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை ". கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. 1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.

14. சந்தா விகிதங்கள்—

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா | 15 | 0 | ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி | 0 | 25 | |
| | 0 | 31 | தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 | 10 | |
| | 0 | 14 | தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது